களுத்துறை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தினதும் (252 அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

1.3 களுத்துறை மாநகர சபையை ஸ்தாபித்தலும் நிதிக் கூற்றுக்களை தயாரித்தலும்

2022 செப்தெம்பர் 06 ஆந் திகதி இலக்கம் 2296/05 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் 2023 மார்ச் 19 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் களுத்துறை நகரசபை கலைக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் களுத்துறை மாநகர சபை ஸ்தாபிக்கப்பட்டு அத்திகதியில் உறுப்பினர்களின் காலம் அமுல்படுகின்ற திகதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் குறித்துரைத்த சபை உறுப்பினர்கள் தெரிவு செய்ய முடியாதிருந்த போதிலும் சபை அத்திகதியின் போது ஸ்தாபிப்பதாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனினும் மாநகர சபையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்கள் தயாரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் சேவைக்காலம் 06 வருடங்களை விஞ்சிய 24 உத்தியோகத்தர் சேவையாற்றுவதுடன் அவர்களில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை உடைய உத்தியோகத்தர்கள் 03 பேர் ஆகும்.	05 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு வருடமும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டு திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2155/6 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் கட்டளை இலக்கம் 398	இறைச்சிக் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது பட்டோலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் முன்னைய ஆண்டின் கேள்வித் தொகையில் 10 சதவீதம் சேர்க்கப்பட்டு நடப்பாண்டின் கேள்விப் பெறுமதி தீர்மானிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.	தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான நிர்வாகம்

2.2.1. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	49,150,100	51,037,527	54,491,959	22,172,132	45,053,000	44,351,384	45,067,646	25,626,565
ii.	வாடகை	11,074,000	18,064,763	13,110,897	5,939,887	19,573,000	18,459,412	14,246,474	985,922
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,245,000	6,217,385	6,217,385	-	3,027,000	3,045,923	3,045,923	-
iv.	ஏனைய வருமானம்	43,460,100	34,408,515	34,408,515	-	227,348,000	238,901,262	164,384,647	83,288,094
		104,929,200	109,728,190	108,228,756	28,112,019	295,001,000	304,757,981	226,744,690	109,900,581

2.1.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	ஆரம்ப ஆதனவரி நிலுவை மீதி பகுப்பாய்வு செய்யப்பட்டு அறவிட முடியாத மீதிகளை இனங்காணல் மற்றும் ஆதனங்களை தடை செய்தல் சபையினால் கால ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அறவிட முடியாத ஆதனங்களின் பெறுமதி ரூபா 1,167,240 பதிவளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டள்ளதுடன் அந்த ஆதனங்கள் தடை செய்யப்பட்டுள்ளது.	அறவிட முடியாத சகல மீதிகளையும் இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	களுத்றை மாநகர சபை ஸ்தாபிக்கும் போது களுத்துறை பிரதேச சபைக்கு உரியதாகக் காணப்பட்ட ஆதனவரி வலையம் களுத்துறை மாநகர சபைக்கு உரியதாக இருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு களுத்துறை பிரதேச சபைக்குரிய ஆதனவரி வலயங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ஆதனவரி மீதி ரூபா 3,474,709 ஆகும். எனினும் நிலுவை ஆதனவரி அறவிடாமல் அந்த பிரிவுகளுக்கு உரிய தற்போதய ஆதனவரி வருமானம் சபையினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அலகுகளின் எண்ணிக்கை மற்றும் பெறுமதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தற்போதய வரி அறவிடுதவதற்கு முன்னர் நிலுவை வரி அறவிடப்படல் வேண்டும்.
(iii)	விநோத வரி வருடாந்த சிட்டையிடல் ரூபா 2,407,736 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 567,030 அதாவது 23 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	2025 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 481,526 அறவிடப்பட்டுள்ளது.	தற்போதய வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	2023 திசெம்பர் 27 ஆந் திகதி முதல் 2024 சனவரி 01 ஆம் திகதி வரை களுத்துறை தெற்கு பொது விளையாட்டு அரங்கில் நடாத்தப்பட்ட சங்கீத நிகழ்ச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட டிக்கட்டுக்களின் பெறுமதியில் 20 சதவீத தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விநோத வரியாக மாநகர சபை நிதியத்திற்கு அறவிடாமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அந்த நிறுவனத்தில் இருந்து பதில் கிடைக்காமையினால் ரூபா 100,000 ஆன நிறுத்தி வைத்தல் கட்டணம் சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) வாடகை

(i)	வியாபார நிலைய வாடகை வருடாந்த சிட்டையிடல் ரூபா 17,193,420 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 5,447,426 அதாவது 31 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	2025 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 1,511,801 அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 251,012 வாடகை நிலுவை ஆண்டின் போது ரூபா 233,712 அதாவது 93 சதவீதம் அறவிடப்படாது இருந்ததுடன் ரூபா 136,200 ஆன நடப்பாண்டின் சிட்டையிடல் ரூபா 109,100 அதாவது 80 சதவீதம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவையில் ரூபா 92,300 அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்ட வரை நவீன கடைத் தொகுதியின் கடை வாடகை சிட்டையிடல் மேற்கொள்ளாமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 21,000,000 இற்கு அண்ணளவான நட்டம் ஏற்பட்டமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023 சனவரி 12 ஆந் திகதி சபை கூட்ட அறிக்கை தீர்மான இலக்கம் 43 இன் பிரகாரம் அறவிடப்பட வில்லை.	தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	நவீன கடைத் தொகுதியில் 96 கடைகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான கடை வாடகை செலுத்தாமை தொடர்பாக சபையினால் வாடகையாளர்களுக்கு எதிராக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 254 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	76 கடைகள் முத்திரை வைக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	சபைக்குரிய இலக்கம் 13/1 மற்றும் 25/1 என்ற கரையோர ஆற்றோர வீதி, களுத்துறை தெற்கில் அமைந்துள்ள 06 பேர்ச் வீதமான காணிகளை வாடகைக்கு வழங்குவதற்கு உரிய 2022 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற நிலுவை வாடகைகளின் கூட்டுமொத்தம் முறையே ரூபா 89,600 மற்றும் ரூபா 109,200 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vi)	சாராணந்த மாவத்தை களுத்துறை தெற்கில் அமைந்துள் 07 பேரச் காணியை வாடகைக்கு வழங்கியதற்குரியதாக 2022 ஆம்	2025 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 40,000 அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியை அறவிடுவதற்கு	மேற்படி

ஆண்டு முதல் காணப்படுகின்ற நிலுவை வாடகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 96,000 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 32 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்க முடியுமாக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 27 விடயங்களுக்காக சபையினால் உபவிதிகள் விதிக்கப் பட்டிருக்கவில்லை.	மாகாண சபை செயற்பட்டதன் பின்னர் புதிய உபவிதிகள் விதிக்கப்படும்.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தனியார் நிறுவனத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 3,895,000 செலுத்தி 2017 திசெம்பர் முதல் ஸ்தாபிக்கப்பட்ட 07 கணனி மென்பொருள் முறைமைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படு நிலையில் காணப்படவில்லை. உரிய சரியான சாத்தியவள ஆய்வு இன்றி கொள்வனவு செய்யப்பட்ட இந்த முறைமை எதிர்பார்க்கப்பட்ட செயற்திறனுடன் 07 வருடங்களுக்கு அண்மித்த காலம் பயன்படுத்தப்படாமல் சபை நிதி எண்ணிக்கை நட்டத்தை ஏற்படுத்துவதற்கு எதிராக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக விசேட விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	குறித்துரைத்த கால எல்லையில் வாகனங்களின் வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் புதுப்பிக்காமையினால் 2010 ஆண்டு முதல் மீளாய்வாண்டிடு வரை 04 வாகனங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 43,395 தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.	பிரயோகரீதியிலான காரணங்களின் அடிப்படையில் தாமதம் ஏற்பட்டிருந்தது.	குறித்துரைத்த தினங்களில் வருமான அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	சபைக்குரிய 06 பேர்ச் காணிகளில் 02 கூறுகள், 07 பேர்ச் காணியில் 01 கூறு மற்றும் 2.66 பேர்ச் காணியில் 01 கூறு ஆக கூட்டுமொத்தமாக 04 காணிக் கூறுகள் 04 வெளிதரப்பினருக்கு குடியிருப்பதற்காக வீடுகளை அமைப்பதற்கு வாடகைக்கு வழங்கி சபைக்கு பாதகமான நிபந்தனைகளை உள்ளடக்கி வாடகை உடன்படிக்கை எகைச்சாத்திடுதல், வருடாந்த வாடகை உரிய பிரகாரம் கால ரீதியில் அறவிடாமல் மற்றும் வாடகை செலுத்துதலை புறக்கணித்தலுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 361,800 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு உதிராக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் கீழ் உத்தியோகத்தருக்கு அரசாங்கத்தின் வீடுகளை ஒதுக்கும் போது கவனத்தில் கொள்ளக் கூடிய விதிகளுக்கு இணங்க சபை செயற்பட்டிருந்ததா என பரீட்சிப்பதற்காக தேவையான உத்தியோகத்தரின் விண்ணப்பம் மற்றும் உரிய விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு சபையினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படுகின்றது.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	முன்னைய ஆண்டுகளில் சபையின் வாகனங்களை பழுதுபார்த்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளாத நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இடவேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் வழங்குனராக பதிவு செய்யாத வழங்குனராக பதிவு செய்திருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படவில்லை.	கறுப்புப் பட்டியலில் இடவேண்டிய நிறுவனங்களை மீண்டும் வழங்குனராக பதிவு செய்யாது இருந்தல் வேண்டும்.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மாநகர சபைக்குச் சொந்தமான 64 கடைகளுக்காக கால ரீதியில் வாடகை உடன்படிக்கை புதிப்பிப்பதற்கும், மாநகர	உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	மாநகர சபை இருந்தமையால் வாடகை

	சபைக்கு உரியதாக இருந்த போதும் சபையிடம் கோவைகள் காணப்படாத 08 கடைகள் சபைக்கு மீண்டும் கையேற்று கேள்வி கோருவதற்கும் மீளாய்வாண்டின போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வேண்டும்.	உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	தேவாலய வீதி பிரதேசத்தில் கட்டுகுறுந்த வீதியில் 2.66 பேர்ச் காணியின் வாடகை உடன்படிக்கை 2011 ஆம் ஆண்டில் முடிவடைந்து இருந்த போதிலும் அதனை மீண்டும் புதுப்பிக்காமல் மற்றும் ரூபா 67,000 ஆன நிலுவை வாடகை செலுத்தாமல் பழைய வாடகையாளர் குடியிருப்பதற்கு எதிராக மீளாய்வாண்டின் போதும் சபையினால் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 266 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறு சபையின் வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் இந்த ஆதனங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் சிட்டையிடப்படாமைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாடகையாளர் பணம் செலுத்தாமையினால் சிட்டையிடப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1988 மே 17 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 1988/22 என்ற சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபை 2017 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளாமையினால் ஆதனவரி வருமானம் வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் ஆதனவரி மீள்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	ஆதனங்களை மதிப்பீடு செய்து ஆதனவரி அறவிடப்படல் வேண்டும்.

3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2020 ஆம் ஆண்டில் ரூபா 240,966,501 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் மாடி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட ஆண்டில் இருந்து மீளாய்வாண்டு வரையில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதன் மேல்மாடியில் கூரை இடை இடையே பாதிப்புக்கு உட்பட்டிருந்தது.	தற்போது மேல் மாடி பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன் கடைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.	சபையின் சொத்துக்களில் இருந்து வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு செயற்திறனாக நடவடிக்கை

			எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டு முதல் ரூபா 14,460,000 செலவில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றுக்காக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம் மீளாய்வாண்டின் போது விளைவற்றுக் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டு முதல் மேற்படி மதிப்பீட்டு உத்தியோகத்தர்களின் அலுவலக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.	
(இ)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ரூபா 6,613,306 செலவில் பழுது பார்க்கப்பட்ட ஹிமிதிரியாவ சுடலைக் கூடம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது.	சுடலைக் கூடத்திற்காக சடலங்கள் கிடைத்திருக்கவில்லை.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 ஆம் ஆண்டில் இயந்திரப் பொறியியலாளரால் 03 டெக்டர் வண்டிகள் பழுது பார்ப்பதற்கு பரிந்துரை செய்யப்படட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	தற்போது அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.	வாகனங்கைப் பழுது பார்த்து பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வண்டி 2023 ஏப்ரல் முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுது பார்க்கப்பட்டிருக்கவில்லை.	பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனங்களைப் பழுது பார்த்து பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	களுத்துறை, கட்டுகுறுந்த காலி வீதியில் 1.3 பேர்ச் அளவான காணி சபையினால் 1994 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்தக் காணியின் உரித்து தொடர்பான விசாரணை செய்கின்ற வழக்கிற்காக காணியின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு உரியதாக உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்தது.	பூச்சிய உரித்து உடைய சபைக்கு கையளிக்குமாறு வாடகையாளர் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.	சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் முறையாக வாடகைக்கு வழங்குதல் வேண்டும்.

3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் ஆரம்பித்த சந்தர்ப்பத்தில்	போதியளவான பெறுகை ஒன்று மேற்கொள்ளப்படாது	தேசிய பெறுகைகள் விழிகாட்டிக் கோவையின்

	இருந்து முடியும் வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் படிமுறைகள் ஒழுங்கு முறையான விபரங்களை உள்ளடக்கி பெறுகைக் கால அட்டவணை ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுமொத்தமாக ரூபா 20,376,515 பெறுமதியான மின்சார உபகரணங்கள் மற்றும் வீதி நிர்மாணித்தல் பொருட்கள் என்பவற்றின் பெறுகைகளின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இருந்தமையால் கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்படவில்லை.	ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது சகல அது சார்ந்த செலவினங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும் கூட்டுமொத்தமாக ரூபா 535,320 பெறுமதியான மின்சார உபகரணங்களின் பெறுகையில் LED மின்குமிழ்கள் 200, சுவிச் பெட்டிகள் 12 என்பன மேற்கூறப்பட்ட கிரய மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	தேவையின் அடிப்படையில் 12 சுவிச் பெட்டிகள் பெறப்பட்டிருந்தது.	மேற்படி
(இ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 500,000 ஐ விஞ்சுகின்ற பொருட் கொள்வனவுகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	தாமத வழுவின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.	தேசிய பெறுகைகள் விழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(அ)(ii) மற்றும் (iv) வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மாதிரிகள் மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரிக்காமல் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 5,351,652 பெறுமதியான மின் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்கள் மற்றும் வீதி நிர்மாணித்தல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட 02 சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்டன.	தற்போது பொருள் பொறுப்பேற்கும் குழு ஒன்றின் மூலம் உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது	மேற்படி

3.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையுடன் எந்த ஒரு உடன்படிக்கையும் செய்யப்படாமல் தலைவரின் கட்டளையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களும் கையளிக்கப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,000,000 ஆன களுகங்வில விளையாட்டு அரங்கிற்கு அருகில் வடிகாண் முறைமையை அங்கீகரிக்கும் செயற்திட்டம் அந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்படாது இருந்தமையால் 2021 செப்தெம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் சங்கத்தின் தகுதிகளை பரீட்சிக்காமல் மீண்டும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு அந்த சமூக அடிப்படையிலான அமைப்பிற்கே 2023 ஆம் ஆண்டில் உடன்படிக்கை இன்றி வழங்கப்பட்டிருந்தது.	2022 ஆம் ஆண்டின் போது சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் தொடர்பாக பிரதேச செயலகத்தில் இருந்து பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போதும் சங்கத்தின் தகுதி பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை.
(ஆ)	மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை மீண்டும் கையளிக்கும் போது வீதி கட்டண பட்டோலையின் (HSR) வீதத்தின் பிரகாரம் மதிப்பீடு திருத்தப்படாமல் 2022 ஆம் ஆண்டின் மதிப்பீட்டிணையே பயன்படுத்தியமையால் சபை நிதியத்திற்கு ரூபா 349,758 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.	ஆரம்ப உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்மையால் மதிப்பீடு திருத்த முடியாது இருந்தது.	மதிப்பீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.9 வாகனப் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 மார்ச் 02 ஆந் திகதி இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரையின் பிரகாரம் சபைக்குரிய சொலெக்ஸ் தண்ணீர் பௌசர் மற்றும் சக்சன் பம்பி உடைய பௌசர் மற்றும் நிசான் தீயணைப்பு வண்டியைப் பழுது பார்த்தல், பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமானதாக இல்லாது இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தமை போதிலும் அந்த வாகனங்கள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாது இருந்ததுடன் அந்த 03 வாகனங்களும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவும் இல்லை.	மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	செயலிழந்த வாகனங்களுக்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பதிவு செய்யப்படாத வாகனங்கள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் விசாரணை செய்தல் வேண்டும்.
(ஆ)	2022 ஒக்தோபர் 16 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையில் விற்றுத் தீர்ப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்ட	பதிவை இரத்துச் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.	மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம்

	இரண்டு டெக்டர்கள் இலக்கத் தகடு இல்லாமையால் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.		விசாரணை செய்து பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபைக்குரிய டெக்டர், டேலர் 2021 ஆம் ஆண்டு முதல் விற்றுத் தீர்ப்பதற்கா இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	விரைவாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	வாகனங்களுக்காக எரிபொருள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், எரிபொருள் விநியோகிக்கும் பதிவேட்டில், மைலோ மீற்றரின் எண்ணிக்கை குறிப்பிடப்படாமல் 08 வாகனங்களுக்காக கூட்டுமொத்தமாக 12,527 லீற்றர் ஆன எரிபொருள் விநியோகிக்கப்பட்ட 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	மைலோ மீற்றரை பழுது பார்க்க வேண்டியிருந்தது.	எரிபொருள் விநியோகித்தல் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு, நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் செயலாற்றலைக் கட்டி எழுப்புவதற்காக உதவி வழங்கும் செயற்பாடு ஒன்றாக அமுல்படுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் சபையின் உள்ளகக் கணக்காய்வினால் காணி உபகூறிடலை உறுதிப்படுத்துதல், ஆதனவரி மற்றும் கடை வாடகையை அறவிடல், வாகனப் பயன்பாடு, பெறுகைகள் போன்ற விசேடமான தொடர்பாக போதியளவான கணக்காய்வு மேற்கொண்டு உள்ளகக் கணக்காய்வு ஐயவினா விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு சரியாக நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சட்டம் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.